வணக்கம்

ஆகாஷ்வாணி - புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : வான்மதி

நாள் 31.03.2024 ஞாயிற்றுக்கிழமை நேரம் : மாலை 6.10 மணி

---

<u>தலைப்புச் செய்திகள்</u>

- குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு இன்று புதுடெல்லியில் முன்னாள் துணை பிரதமர் திரு. எல்.கே. அத்வானிக்கு நாட்டின் உயரிய குடிமகன் விருதான பாரத் ரத்னாவை வழங்கி கௌரவித்தார்.

- இயேசு கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டு உயிர்த்தெழுந்த தினமான இன்று உலகெங்கும் உள்ள கிறிஸ்தவ மக்களால் ஈஸ்டர் பண்டிகையாக கொண்டாடப்படுகிறது.
- கச்சத்தீவை விட்டுக்கொடுத்த காங்கிரஸ் கட்சியால் ஒருபோதும் மக்களின் நம்பிக்கையை பெற இயலாது என பா.ஜ.க.வின் மூத்த தலைவரும் பிரதமருமான திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.
- மக்களவை தேர்தல் வாக்குப்பதிவிற்கு இன்னும் 19 நாட்களே எஞ்சியுள்ள நிலையில் அரசியல் கட்சிகள் தங்களது வேட்பாளர்கள் மற்றும் கூட்டணி கட்சி வேட்பாளர்களுக்கு ஆதரவாக வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

<u>பாரத் ரத்னா 1 (16)</u>

குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு இன்று முன்னாள் துணை பிரதமர் திரு. எல்.கே. அத்வானிக்கு நாட்டின் உயரிய குடிமகன் விருதான பாரத் ரத்னாவை வழங்கி கௌரவித்தார். புதுடெல்லியில் உள்ள திரு.அத்வானியின் இல்லத்தில் குடியரசு தலைவர் இவ்விருதை வழங்கினார். இந்நிகழ்ச்சியில், குடியரசு துணை தலைவர் திரு. ஜக்தீப்

தன்கர், பிரதமர் திரு நரேந்திர மோடி, முன்னாள் குடியரசு துணை தலைவர் திரு வெங்கைய நாயுடு, பாதுகாப்பு அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங், உள்துறை அமைச்சர் திரு. அமித்ஷா மற்றும் திரு. அத்வானியின் குடும்ப உறுப்பினர்கள் பங்கேற்றனர். இந்நிகழ்ச்சி தொடர்பாக, குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு தமது சமூக ஊடகப் பதிவில், இந்திய அரசியலின் தலைவரான, திரு. எல்.கே. அத்வானி 70 வருடங்களுக்கும் மேலாக அசைக்க முடியாத அர்ப்பணிப்புடன் நாட்டிற்கு சேவை செய்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார். சுதந்திரத்திற்குப் பிறகு தேசிய முன்னுரிமைகளை வெற்றிகரமாக மாற்றியமைத்து, நாட்டை வளர்ச்சிப் பாதைக்கு கொண்டு சென்ற சில அரசியல் தலைவர்களில் திரு. அத்வானியும் ஒருவர் என குறிப்பிட்டுள்ளார்.

<u>பாரத் ரத்னா 2 (5)</u>

முன்னதாக நேற்று புதுடெல்லியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் முன்னாள் பிரதமர்கள் பி.வி. நரசிம்மராவ், சௌத்ரி சரண்சிங், வேளாண் விஞ்ஞானி சுவாமிநாதன், பீகார் மாநில முன்னாள் முதலமைச்சர் கர்பூரி தாக்கூர் ஆகியோரின் மறைவுக்குப் பிந்தைய பாரத ரத்னா விருதுகளை குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு வழங்கினார்.

<u>மோடி கச்சத்தீவு (8)</u>

கச்சத்தீவை விட்டுக்கொடுத்த காங்கிரஸ் கட்சியால் ஒருபோதும் மக்களின் நம்பிக்கையை பெற இயலாது என பா.ஜ.க.வின் மூத்த தலைவரும் பிரதமருமான திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார். இது குறித்து அவர், வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவில் இந்தியர்களின் ஒற்றுமை, நலன்கள் ஆகியவற்றை 75 ஆண்டுகளாக காங்கிரஸ் கட்சி பலவீனப்படுத்தி இருப்பதாக தெரிவித்துள்ளார். காங்கிரஸ் கட்சியின் இந்த

நடவடிக்கை மக்களின் மத்தியில் தீராத சோகத்தை ஏற்படுத்தி இருப்பதாக திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

<u>மோடி மீரட் (5)</u>

பாரதீய ஜனதா கட்சியின் மூத்த தலைவரும் பிரதமருமான திரு.நரேந்திர மோடி இன்று உத்தரபிரதேசத்தில் உள்ள மீரட்டில் நடைபெறும் பேரணியில் பங்கேற்று தேர்தல் பிரச்சாரத்தை தொடங்கினார். மீரட் மக்களவை தொகுதியில் ராமாயணம் தொடர் புகழ் திரு. அருண் கோவிலை ஆதரித்து அவர் தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டார்.

<u>ஈஸ்டர் (13)</u>

இயேசு கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டு உயிர்த்தெழுந்த தினமான இன்று உலகெங்கும் உள்ள கிறிஸ்தவ மக்களால் ஈஸ்டர் பண்டிகையாக கொண்டாடப்படுகிறது. இதனை முன்னிட்டு இந்தியா மற்றும வெளிநாடுகளில் உள்ள கிறிஸ்துவ மக்களுக்கு குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு, குடியரசு துணைத்தலைவர் திரு ஜக்தீப் தன்கர், பிரதமர் திரு. நரேந்திர மோடி, புதுச்சேரி துணைநிலை ஆளுநர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் உள்ளிட்ட தலைவர்கள் வாழ்த்து தெரிவித்துள்ளனர். குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு விடுத்துள்ள வாழ்ததுச் செய்தியில் இந்தப் பண்டிகை இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலின் கொண்டாட்டத்தை குறிக்கிறது என்றும் இதுஅன்பு மற்றும இரக்கத்தின் சின்னமாகும் என்றும் அவர் குறிப்பிடடுள்ளார். இயேசு கிறிஸ்துவின் போதனைகள் நம்மை அமைதி மற்றும் நல்லிணக்கப்பாதையில் வழி நடத்துகின்றன என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## மக்களவை தேர்தல் – 1 (11)

வரும் மக்களவை தேர்தலில் 100 சதவிகித வாக்குப்பதிவை வலியுறுத்தி இந்திய தேர்தல் ஆணையம் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்தி வருகிறது. விழுப்புரம் மாவட்டத்தில் தேர்தல் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் அம்மாவட்ட தேர்தல் அலுவலரும், மாவட்ட ஆட்சித் தலைவருமான திரு. சி.பழனி 100 சதவிகிதம் வாக்களிப்பை வலியுறுத்தி விழுப்புரம் மாவட்டம், கோட்டக்குப்பம் நகராட்சிக்கு உட்பட்ட கடற்கரையில் படகுப் போட்டியை இன்று துவக்கி வைத்தார். தொடர்ந்து அங்கு 100 சதவிகிதம் வாக்களிப்பு குறித்த மணற்சிற்பங்களையும் அவர் பார்வையிட்டார். இந்நிகழ்ச்சியில் பேசிய அவர் வாக்களிப்பதன் அவசியம் குறித்தும், அனைவரும் 100 சதவிகிதம் வாக்களிக்க வேண்டும் என்றும் தெரிவித்தார்.

## மக்களவை தேர்தல் – 2 (19)

புதுச்சேரி மற்றும் தமிழகம் உட்பட நாடுமுழுவதும் வரும் 19ஆம் தேதி 17 மாநிலங்கள் மற்றும் 4 யூனியன் பிரதேசங்களில் உள்ள 102 மக்களவைக்கு முதற்கட்ட வாக்குப்பதிவு நடைபெறவுள்ள நிலையில் தமிழ்நாடு, அருணாச்சல பிரதேசம், மேகாலயா, மிசோரம், நாகாலாந்து, சிக்கிம், லட்சத்தீவு, அந்தமான் நிக்கோபர் தீவுகள், மற்றும் புதுச்சேரியில் ஒரே கட்டமாக தேர்தல் நடைபெறவுள்ளது. ஹோலிப் பண்டிகை மற்றும் பீகார் நிறுவன தினத்தை முன்னிட்டு பீகாரில் வேட்புமனு தாக்கல் செய்வதற்கான கடைசி தேதியை இந்திய தேர்தல் ஆணையம் நீட்டித்துள்ளது. புதுச்சேரியில் வரும் ஏப்ரல் 19ஆம் தேதி நடைபெறவுள்ள மக்களவை தேர்தலில் 26 வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர். ஒவ்வொரு வேட்பாளர்களுக்கும், தேர்தல் சின்னங்கள் ஒதுக்கப்பட்டுள்ளதாக, மாவட்ட தேர்தல் அதிகாரியும், மாவட்ட ஆட்சியருமான திரு.குலோத்துங்கன் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக, புதுச்சேரி

மக்களவை தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் இறுதிப் பட்டியலையும் அவர் நேற்று வெளியிட்டுள்ளார். புதுச்சேரியில் அங்கீகரிக்கப்பட்ட தேசிய மற்றும் மாநில அரசியல் கட்சிகளின் 4 வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர். இந்திய தேசிய காங்கிரஸ் வேட்பாளர் திரு. வி. வைத்திலிங்கத்திற்கு கை சின்னமும், பாரதீய ஜனதா கட்சி வேட்பாளர் திரு. ஆ. நமசிவாயத்திற்கு தாமரைச் சின்னமும்,

<u>மக்களவை தேர்தல் – 3 (13)</u>

அண்ணா திராவிட முன்னேற்றக் கழக வேட்பாளர் திரு.ஜி.தமிழ்வேந்தனுக்கு இரட்டை இலை சின்னமும், பகுஜன் சமாஜ் கட்சி வேட்பாளர் திரு.அலங்கார வேலுவுக்கு யானை சின்னமும் ஒதுக்கப்பட்டுள்ளது. புதுச்சேரி மக்களவை தொகுதியில் அங்கீகரிக்கப்பட்ட தேசிய மற்றும் மாநில கட்சிகளைத் தவிர பதிவு செய்யப்பட்ட அரசியல் கட்சிகளின் 3 வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர். அவர்களுக்கும் சின்னம் ஒதுக்கப்பட்டுள்ளன. இந்திய சோஷியலிஸ்ட் யூனிட்டி சென்டர் வேட்பாளர் திரு. பி. சங்கரனுக்கு பானை சின்னமும், இந்திய ஐக்கிய குடியரசு கட்சி வேட்பாளர் திரு கே. பிரபுதேவனுக்கு காஸ் சிலிண்டர் சின்னமும், நாம் தமிழர் கட்சி வேட்பாளர் டாக்டர் மேனகாவுக்கு மைக் சின்னமும் ஒதுக்கப்பட்டுள்ளது. இது தவிர புதுச்சேரி மக்களவை தொகுதியில் 19 சுயேச்சை வேட்பாளர்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட சின்னங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.

புதுச்சேரி ப்ரெயில் – (18)

புதுச்சேரி மக்களவை தேர்தலில் பார்வையற்ற வாக்காளர்கள் யாருடைய உதவியும் இன்றி வாக்களிக்கும் வகையில், இந்திய தேர்தல் ஆணையம் பார்வையற்றோர் எழுத்து முறையினை நடைமுறைப்படுத்த உத்தரவிட்டுள்ளது. இதன்படி பார்வையற்ற வாக்காளர்களுக்கு, வாக்குப்பதிவு எந்திரத்தில் உள்ள வாக்குச்சீட்டில் உள்ளபடி வேட்பாளர்களின் வரிசை எண், அவர்களின் பெயர்கள், சம்பந்தப்பட்ட அரசியல் கட்சி ஆகியவை தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் பார்வையற்றோர் ப்ரெயில் என்று சொல்லக்கூடிய எழுத்து முறையில் அச்சடிக்கப்பட்டு, பார்வையற்றோர் தகவலுக்கு கொடுக்கப்படும். பார்வையற்ற வாக்காளர்கள் அதிலுள்ள விவரங்களைப் படித்து, வேட்பாளர்களின் வரிசை எண் மற்றும் வாக்குச் சீட்டு எந்திரத்தின் எண் ஆகியவற்றை உணர்ந்து வாக்களிக்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. பார்வையற்ற வாக்காளர்கள் விரும்பினால் 1961ஆம் ஆண்டின் தேர்தல் நடத்தை விதிகள் 49-N-ன் படி துணைக்கு ஒருவரை அழைத்துச் செல்லலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இத்தகவலை பார்வையற்றோர் நலச்சங்கங்கள், பார்வையற்றோர் விடுதி காப்பாளர்கள், பார்வையற்றோருக்கு தெரிவு படுத்தும்படி மாநில தலைமை தேர்தல் அதிகாரி திரு. ஜவஹர் செய்திக்குறிப்பு ஒன்றில் தெரிவித்துள்ளார்.

தேர்தல் பிரச்சாரம் 1 (16)

மக்களவை தேர்தல் வாக்குப்பதிவிற்கு இன்னும் 19 நாட்களே எஞ்சியுள்ள நிலையில் அரசியல் கட்சிகள் தங்களது வேட்பாளர்கள் மற்றும் கூட்டணி கட்சி வேட்பாளர்களுக்கு ஆதரவாக வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

திமுக தலைவர் திரு. மு.க. ஸ்டாலின் அக்கட்சி வேட்பாளருக்கு ஆதரவாக, சின்னியம்பாளையத்தில் வாக்கு சேகரித்தார்.

அஇஅதிமுக பொதுச் செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி இன்று மயிலாடுதுறை, சிதம்பரம், திருவாரூர் பகுதிகளிலும், வாக்கு சேகரித்து வருகிறார்.

சென்னை ஆழ்வார் பேட்டையில் த.மா.க. வின் தேர்தல் அறிக்கை ஒலிநாடாவை வெளியிட்டு அக்கட்சித் தலைவர் திரு. ஜி.கே. வாசன் தேர்தல் பரப்புரை மேற்கொண்டார்.

பிஜேபி மாநில தலைவர் திரு. அண்ணாமலை இன்று திருப்பூர் மாவட்டம் பல்லாடத்தில் தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டுள்ளார்.

காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. மல்லிகார்ஜுன கார்கே, திரு ராகுல் காந்தி, பிரியங்கா காந்தி ஆகியோர் தமிழகத்தில் அடுத்த வாரம்,

<u>தேர்தல் பிரச்சாரம் 2 (9)</u>

இந்தியா கூட்டணி கட்சி வேட்பாளர்களுக்கு ஆதரவாக வாக்கு சேகரிப்பில் ஈடுபடவுள்ளனர்.

பாமக தலைவர் மருத்துவர் திரு.அன்புமணி ராமதாஸ் இன்று தென்சென்னை, மத்திய சென்னை, வடசென்னை, சோழிங்க நல்லூர், வில்லிவாக்கம் ஆகிய பகுதிகளில் தேர்தல் பரப்புரை மேற்கொண்டுள்ளார்.

புதுச்சேரியில் வரும் மக்களவை தேர்தலை முன்னிட்டு தேசிய ஜனநாயக கூட்டணி வேட்பாளர் திரு. ஆ. நமசிவாயத்தை ஆதரித்து, முதலமைச்சர் திரு. ரங்கசாமி, இந்திரா நகர் தொகுதியில் நடைபெற்ற அறிமுக கூட்டத்தில் தொண்டர்கள் மற்றும் பொதுமக்களிடையே உரையாற்றினார்.

புதுச்சேரி காங்கிரஸ் கட்சி வேட்பாளர் திரு. வைத்திலிங்கம் இன்று காமராஜ் தொகுதிக்கு உட்பட்ட பகுதிகளில் உள்ள மக்களிடம் வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார்.

மக்களவை தேர்தல் 1 (15)

புதுச்சேரி மக்களவை தொகுதி தேர்தலுக்கான வாக்குப்பதிவை திறம்பட நடத்துவதற்கான அனைத்து முன்னேற்பாடுகளும் மாவட்ட தேர்தல் அதிகாரியால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அதன் அடிப்படையில் புதுச்சேரி பிராந்தியத்தில் 739 வாக்குச் சாவடிகளும், காரைக்கால் பிராந்தியத்தில் 164 வாக்குச்சாவடிகளும், மாஹே பிராந்தியத்தில் 31 வாக்குச்சாவடிகளும், மற்றும் ஏனாம் பிராந்தியத்தில் 33 வாக்குச்சாவடிகளும் என மொத்தம் 967 வாக்குச்சாவடிகள் புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில் அமைக்கப்பட்டுள்ளன. இதில் புதுச்சேரி பிராந்தியத்தில் உள்ள 739 வாக்குச்சாவடிகளில் பணிபுரிபவர்களை தேர்வு செய்வதற்கான முதற்கட்ட தற்செயல் கலப்பு முறை கடந்த 17ஆம் தேதி நடைபெற்றது. இதனைத் தொடர்ந்து இன்று 2ஆம் கட்ட தற்செயல் கலப்பு முறை தேர்தல் நடத்தும் அதிகாரி திரு. குலோத்துங்கன் முன்னிலையில் நடைபெற்றது. இந்த தற்செயல் கலப்பு முறையில் தேர்வு செய்யப்பட்ட அனைத்து வாக்குச்சாவடி அதிகாரிகளுக்கும் வரும் ஏப்ரல் மாதம் 5, 6 மற்றும் 7ஆம் தேதிகளில் பயிற்சி வகுப்புகள் நடைபெறவுள்ளது.

புதுச்சேரி மக்களவை தேர்தல் 2 (14)

அனைத்து வாக்குச்சாவடி அதிகாரிகளும் பயிற்சி வகுப்பில் கட்டாயம் பங்கேற்க வேண்டும் என்றும், தவறுபவர்கள் மீது சட்டப்பூர்வமான நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்நிகழ்ச்சியின்போது மாவட்ட துணை தேர்தல் அதிகாரி திரு. வினயராஜ், நோடல் அதிகாரி செல்வி முத்து மீனா ஆகியோர் உடனிருந்தனர். இதனைத் தொடர்ந்து வாக்கு எண்ணிக்கை நடைபெறும் மையங்களாக லாஸ்பேட்டையில் அமைந்து மகளிர் அரசு பொறியியல் கல்லூரி, மற்றும் மோதிலால் நேரு அரசு தொழில்நுட்பக் கல்லூரிகளில் மின்னணு வாக்குப்பதிவு எந்திரங்களை பாதுகாக்கும் அறை மற்றும் வாக்கு

எண்ணும் அறைகளில் செய்யப்பட்டுள்ள முன்னேற்பாடுகள் மற்றும் பாதுகாப்பு உள்ளிட்ட அம்சங்களையும் தேர்தல் பார்வையாளர்கள் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தனர். அப்போது தேர்தல் நடத்தும் அதிகாரியும் மாவட்ட ஆட்சியருமான திரு. குலோத்துங்கன், நோடல் அதிகாரி திரு. சுதாகர் ஆகியோர் உடனிருந்தனர்.

நிர்மலா சீதாராமன் (8)

நடப்பு நிதியாண்டின் 4ஆவது காலாண்டில் இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தி 8 சதவிகிதம் அல்லது அதற்கும் அதிகமாக வளரும் என்று மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார். மும்பையில் நடைபெற்ற முதலீட்டு உச்சி மாநாட்டில் பங்கேற்றுப் பேசிய அவர், மேம்பட்ட பண வீக்க மேலாண்மை மற்றும் மேக்ரோ பொருளாதார ஸ்திரத் தன்மையின் தாக்கம் காரணமாக 2023-24ஆம் நிதியாண்டில் பொருளாதாரம் ஆண்டுக்கு ஆண்டு வளர்ச்சியின் அதே விகிதத்தை காட்டும் என்று எதிர்பார்க்கப்படுவதாக தெரிவித்தார்.

புதுச்சேரி காற்று மாசு (10)

புதுச்சேரி தேர்தல் துறையின் சார்பில் சாரதா கங்காதரன் கலை அறிவியல் கல்லூரியில் வரும் மக்களவை தேர்தலை முன்னிட்டு காற்று மாசை கட்டுப்படுத்தும் ஒரு அங்கமாக மரக்கன்றுகள் நடும் நிகழ்ச்சி இன்று நடைபெற்றது. நிகழ்ச்சியில் நாட்டு நலப்பணித் திட்ட தன்னார்வலர்கள் கல்லூரி வளாகத்தில் மரக்கன்றுகள் நட்டனர். மேலும் இந்நிகழ்ச்சியில் வாக்களிப்பதின் முக்கியத்துவத்தை உணர்த்தும் விதமாக 100 சதவிகிதம் வாக்களிப்பை உறுதி செய்யவும் மாணவர்களிடம் விளக்கிக் கூறப்பட்டது. இந்நிகழ்ச்சியில் முனைவர் திரு. கோவிந்தசாமி முறைப்படுத்தப்பட்ட கல்வி மற்றும் தேர்தல் பங்களிப்பு மாநில ஒருங்கிணைப்பாளர், கல்லூரியில் பேராசிரியர் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.